(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 22.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 பெப்ரவரி 19, புதன்ழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

152/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெரவலப்பிட்டியவில் நிறுவப்பட்டுள்ள கழிவுகளால் மின்னுற்பத்தி செய்யும் மின்னுற்பத்தி நிலையத்தில் (Waste-to-Energy Power Plant) உற்பத்தி செய்யப்படும் ஒரு அலகு மின்சாரத்திற்கு இலங்கை மின்சார சபை செலுத்தும் விலை யாதென்பதையும்;

(ii) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்தை மிகச்சிறப்பான முறையில் இயக்குவதற்கு ஒரு நாளைக்கு தேவைப்படும் கழிவுகளின் அளவு எத்தனை மெட்ரிக் தொன்கள் என்பதையும்;

(iii) 2024 ஆம் ஆண்டு மேற்படி மின்னுற்பத்தி நிலையத்திற்கு தினசரி வழங்கப்பட்ட கழிவுகளின் சராசரி அளவு எத்தனை மெட்ரிக் தொன்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்திற்கு கழிவுகளை வழங்கும் உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) கழிவுகள் எரியூட்டப்பட்டதன் பின்னர் தற்போது மேற்படி மின்னுற்பத்தி நிலைய வளாகத்தினுள் சேர்ந்துள்ள சாம்பலின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து வெளியாகும் சாம்பலை சுற்றாடல் நேயமிக்க வகையில் முகாமைத்துவம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்திற்கு 2023 ஆம் ஆண்டுக்குரியதாக சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

179/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபை கூட்டிணைக்கப்பட்ட திகதியையும்;

(ii) இலங்கை மின்சார சபைக்காக அரசாங்கம் முதலீடு செய்த மொத்த மூலதனத்தையும்;

(iii) இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட குறுகிய கால மற்றும் நீண்ட கால கடன்களின் மொத்தத் தொகையை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை மின்சார சபையில் பணிபுரிகின்ற நிரந்தர மற்றும் அமய ஊழியர்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்;

(ii) 2024 சனவரி முதல் டிசெம்பர் வரை பணியாட்டொகுதியினருக்கு மாதாந்தம் வழங்கப்பட்ட சம்பளம், மேலதிக நேர ஊதியம், தொழில் படிகள், மிகையூதியம், போக்குவரத்துச் செலவுகள் மற்றும் வேறு ஏதேனும் ஊதியங்கள் ஆகியவற்றுக்காக மொத்தம் செலவான தொகையை தனித்தனியாகவும்;

(iii) இலங்கை மின்சார சபை அதன் பணியாட்டொகுதியினருக்கான உழைக்கும் போது செலுத்தும் வரியை (PAYE) செலுத்துகிறதா என்பதையும்;

(iv) இன்றேல், உழைக்கும் போது செலுத்தும் வரியை அது செலுத்தாது நிறுத்திய திகதியையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

245/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலன்னாவை பிரதேச செயலகப் பிரிவில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான உத்தேச கருத்திட்டங்களில் இதுவரை செயற்படுத்தப்படாது எஞ்சியுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு கருத்திட்டமும் செயற்படுத்தப்படும் காலப்பகுதி, நிதிவசதி பெறப்படும் விதம் மற்றும் செயற்படுத்தும் நிறுவனம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

257/2024

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் 'ஹோலுவகொட' அபிவிருத்திக் கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாது;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களின் பரப்பளவு எவ்வளவு;

(iii) மேற்படி நிலங்களை விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதில் இன்றளவில் காணப்படுகின்ற தடைகள் யாவை;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்காக இதுவரையில் செலவிடப்பட்டுள்ள தொகையுடன் ஒப்பிடுகையில், இக்கருத்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

440/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவளை பொது விளையாட்டரங்கு (நகர சபை விளையாட்டரங்கு) விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு உகந்த நிலையில் காணப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டரங்கில் நீர் வழிந்தோடுவதற்கு முறையான வழிமுறையொன்று இல்லை என்பதையும்;

(iii) அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள வடிகாலமைப்பின் காரணமாக கிரிக்கட் போட்டிகளை நடாத்த முடியாதுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை மேற்படி விளையாட்டரங்கை நவீனமயப்படுத்த செலவிடப்பட்ட தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டரங்குக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு சம்பந்தமான விசாரணை நடாத்தப்படுமா என்பதையும்;

(iii) பண்டாரவளை பிரதேச விளையாட்டு வீரர்களுக்கு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பயன்படுத்தக் கூடியவகையில் மேற்படி விளையாட்டரங்கை நவீனமயப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீடு சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட இரண்டாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 பெப்ரவரி 17) [1].

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

**[1]** "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.